


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சந்தித்து, ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் 26.10.2023 அன்று நடைபெற்ற 7வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில், ஜப்பான் சுற்றுலா கண்காட்சி செயற்குழுவின் தலைவர் ஹிரோயுகி தகாஹாஷி (Hiroyuki Takahashi) அவர்கள் தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்கு வழங்கிய Executive Committee Award விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மைச் செயலாளர் /சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் /மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர்.பி.கே. சேகர்பாபு முன்னிலை! பி.கே.மூர்த்தி தலைமை!

# அம்பத்தூரில் உடன்பிறப்புகள் கொண்டாடும் - கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி - ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் - நாஞ்சில் சம்பத் சிறப்புரை!

சென்னை, நவ.3-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், உடன்பிறப்புகள் கொண்டாடும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (4.11.2023 - சனிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் அம்பத்தூர் - ஓ.டி. பேருந்து நிலையத்தில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினரும், மண்டலக் குழுத் தலைவருமான பி.கே.மூர்த்தி தலைமை வகிக்கிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு மற்றும் அம்பத்தூர் தொகுதியின் தலைமைக் கழகப் பார்வையாளர் பி.டி.சி.ஜி.செல்வராஜ், மேயர் திருமதி பிரியா ராஜன், பகுதிச் செயலாளர்கள் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., டி.எஸ்.பி. இராஜ கோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் ஜி.சாந்தகுமாரி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஜி.வி.நாகவள்ளி, எல்.டி.எப். மோகன், து.ஆயிரம், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், கு.கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, ஜெ.பாலமுருகன், மா.பச்சையப்பன், அ.திராவிட செல்வம், க.முரளி பாபு, க.கதிஜா, மா.ரமேஷ், வி.ரவீந்திரன், பு.வீரா, வெ. ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ப.மதி, எம்.குணசேகரன், மா.குப்புசாமி, க. ஜீவா, கோ. சேகர்லால், பொன். நவராஜ் ரவி, ஆ.இரா. அருண், எம்.ஹரிகிருஷ்ணன், எஸ்.பி.அரிகிருஷ்ணன், பி.வி. மூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ஈ.வி. கே.எஸ்.இளங்கோவன், நாஞ்சில் சம்பத் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ப. ரங்கநாதன், கே.சந்துரு, கே.எஸ்.இரவிச்சந்தரன், சங்கரி நாராயணன், தமிழன் பிரசன்னா, எஸ். மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ்.எம். நாதன், எம்.விஜய குமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, சி.மகேஷ் குமார், பரிதி இளம் சுருதி, ஆர்.வரதன், கோ. ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன், இசட் ஆசாத், கூ.பீ. ஜெயின், சரிதா மகேஷ் குமார், ஸ்ரீராமுலு, வே.வாசு ஐ.சி.எப். வ. முரளிதரன், ஏ.நாகராசன், சொ.வேலு, வி. சுதாகர், எம்.சாமிக்கண்ணு, செ.தமிழ் வேந்தன், எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி உள்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்கின்ற னர்.

வட்டச் செயலாளர் மு. ரகு நன்றி கூறுகிறார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு மாணவர்களுக்கு ஒப்புவித்தல் போட்டி!

### மாதவரம் எஸ். சுதர்சனம் தலைமை!

### இறையன்பன் குத்தூஸ் பங்கேற்பு !

சென்னை, நவ. 3 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் பள்ளி மாணவ - மாணவிகளுக்கு ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது.

மாதவரம் செயின்ட் ஆண்டனிஸ் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில செயலாளர் இறையன்பன் குத்தூஸ், துணைச் செயலாளர் கவிஞர் நன்மாறன், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பாக ஒப்பிவித்தல் போட்டியில் பங்கேற்ற நூற்றுக் கணக்கான மாணவ - மாணவிகளில் சிறப்பாக ஒப்பிவித்த மூன்று பேர்களுக்கு பரிசுத்தொகையும் பங்கேற்ற மாணவ - மாணவிகளுக்கு அனைவருக்கும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் மிசா.பா.மதிவாணன், மாவட்ட துணைச் செயலாளர் டி.ராமகிருஷ்ணன், மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் என்.நாராயணன், சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட தலைவர் முல்லை ஆறுமுகம்,

மாவட்ட அமைப்பாளர் கு.தமிழ்மணி, மற்றும் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் டி.கார்த்திகேயன், பெருமாள், ஏ.திராவிட மணி, கே.முருகேசன், ஜி. காமராஜ், நா.பரசுராமன், கே. தங்கராஜ், பா.திருநாவுக்கரசு, கிழக்கு பகுதி அவைத்தலைவர் ஆர். சி.ஆசைத் தம்பி, திருவொற்றியூர் கிழக்கு பகுதி துணைச் செயலாளர் பிரபாவதிமணி, மாவட்ட கழகப் பிரதிநிதி பி.எஸ்.சைலஸ், மாவட்ட இலக்கிய அணி தலைவர் மகிழன், இரா. கணேசன், வாழப்பாடி செந்தில் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் அவர்களின் மேலான வழிகாட்டுதலின்படி கல்விசாரா மற்றும் மன்ற செயல்பாடுகளில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுப் பள்ளி மாணவச் செல்வங்கள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு கல்விச் சுற்றுலா செல்கின்றனர். அதனையொட்டி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகம் வருகை புரிந்திருந்த 100 மாணவர்களை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வரவேற்றார். அம்மாணவர்களுடன் உரையாடி பயணத்திற்கு தேவையான உபகரணங்களை வழங்கி வாழ்த்துகள் தெரிவித்துக்கொண்டார். இம்மாணவர்களை நவம்பர் 4 முதல் நவம்பர் 11 வரை ஜப்பான் மற்றும் தென்கொரியா நாடுகளில் உள்ள பல்வேறு இடங்களுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அழைத்துச் செல்கிறார். முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ‘அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல! அது பெருமையின் அடையாளம்’ என்பதற்கு இப்பயணமும் ஒரு சாட்சியாக அமைந்திருக்கிறது.


